**10.03.2026**

**கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பூசி**

- கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பூசியை 14 வயதான 1.15 கோடி பெண் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்குவதற்கான திட்டத்தை பிரதமர் மோடி பிப்ரவரி 28இல் தேசிய அளவில் தொடங்கிவைத்தார்.
- முன்னதாக, ஜனவரி மூன்றாம் வாரத்தில் தமிழக அரசும் இதுபோன்ற ஒரு திட்டத்தை தொடங்கியது.
- முதல் கட்டமாகத் தமிழகத்தில் நான்கு மாவட்டங்களில் இது நடைமுறைக்கு வந்துள்ளது.
- இனி மற்ற மாவட்டங்களுக்கும் படிப்படியாக நடைமுறைக்கு வரும் என்று அரசு அறிவித்துள்ளது.
- மக்கள் பெரிதும் வரவேற்க வேண்டிய முன்னெடுப்பு இது.

**எச்சரிக்கும் புள்ளிவிவரம்**

- உலகளாவிய புற்றுநோய் ஆய்வகம் (GLOBOCAN) 2022இல் கொடுத்துள்ள தரவின்படி, இந்தியாவில் 35 முதல் 44 வயதுக்கு உள்பட்ட பெண்களிடம் காணப்படும் புற்றுநோய்களில் கருப்பை வாய்ப் புற்றுநோய் இரண்டாம் இடத்தில் இருக்கிறது.
- இந்தியாவில் ஆண்டுதோறும் 1,20,000 பெண்கள் புதிதாக இந்த நோயால் பாதிக்கப்படுவதும், 80,000 பேர் இதனால் உயிரிழப்பதும் தெரியவந்திருக்கிறது.
- தமிழ்நாட்டில் 2023இல் மட்டும் 8,534 பெண்கள் இந்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்ததாக மத்திய அரசு அறிவித்திருந்தது.
- பெண்களுக்குக் கருப்பை வாய்ப் பகுதியில் 'மனித பாப்பிரோமா வைரஸ்' (Human Papilloma Virus - HPV) தொற்றுவதுதான் கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கு முதன்மைக் காரணம்.

**அரசுத் திட்டங்கள்**

- கருப்பை வாய்ப் புற்றுநோயை 2030க்குள் ஒழிப்பதற்கு 2020இல் 'கருப்பை வாய்ப் புற்றுநோய் ஒழிப்பு முன்னெடுப்பு' (Cervical cancer elimination initiative) என்னும் திட்டத்தை உலகச் சுகாதார நிறவனம் நடைமுறைப்படுத்தியது.
- அதன்படி, ஒவ்வொரு நாட்டுக்கும் 90/70/90 என்னும் இலக்கு நிர்ணயித்தது.
- அதாவது, 90% பதின்பருவப் பெண்களுக்கு 'ஹெச்பிவி தடுப்பூசி' செலுத்தப்பட வேண்டும்.
- 70% பெண்களுக்கு 35 வயதுக்குள் 'பாப் ஸ்மியர்' (Pap smear) என்னும் கருப்பை வாய்ப் புற்றுநோயை முன்கூட்டியே அறிய உதவும் பரிசோதனையை மேற்கொண்டுவிட வேண்டும்.
- 90% பெண்களுக்குத் தொடக்கத்திலேயே இந்தப் புற்றுநோயைக் குணப்படுத்திவிட வேண்டும்.
- இதன் முதல்படியாக, கார்டாசில்-4 (Gardasil-4) என்னும் தடுப்பூசி தேசிய அளவில் இப்போது வழங்கப்படுகிறது.
- பொதுவாக, 'ஹெச்பிவி தடுப்பூசி' குறைந்தது இரண்டு தவணைகள் செலுத்தப்படுவது உண்டு.
- ஆனால், கார்டாசில்-4 தடுப்பூசியை ஒரு தவணை மட்டும் செலுத்திக்கொண்டால் போதும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்தத் தடுப்பூசி 93–100% 'மனித பாப்பிலோமா வைரஸை' எதிர்ப்பதாகச் சோதனை முடிவுகள் உறுதிப்படுத்தியுள்ளதால், இந்திய மருந்து ஒழுங்குமுறை வாரியம் (India's drug regulation) ஒரு தவணைத் தடுப்பூசிக்கு அனுமதி அளித்துள்ளது.
- உலகச் சுகாதார நிறுவனமும் இதை ஒப்புக்கொண்டுள்ளது.
- அதேவேளை, தமிழக அரசு வழங்கி வருகிற 'ஹெச்பிவி' தடுப்பூசித் திட்டத்தில் செர்வாவாக் (CERVAVAC) தடுப்பூசி பயன்படுத்தப்படுகிறது.
- இது ஓர் இந்தியத் தயாரிப்பு, இதை இரண்டு தவணைகளில் செலுத்திக்கொள்ள வேண்டும்.
- அதாவது, முதல் தவணைக்குப் பிறகு 6 மாதங்கள் கழித்து, இரண்டாவது தவணையைச் செலுத்திக்கொள்ள வேண்டும் (0,6).
- இப்போதைக்கு இது 14 வயதான பெண் குழந்தைகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.
- படிப்படியாக 9 – 14 வயதுவரை உள்ள பெண் குழந்தைகளுக்கும் இது வழங்கப்பட இருப்பதாக அரசு அறிவித்துள்ளது.
- செர்வாவாக் தடுப்பூசியை 14 வயது வரைதான் வழங்க வேண்டும் என்பதில்லை.
- 15 வயதுக்கு மேல் உள்ள பெண்களுக்கும் வழங்கலாம்.

- தனியார் மருத்துவமனைகளில் 15 – 26 வயதுக்குள் இருக்கிற பெண்களுக்கு இது வழங்கப்படுகிறது.
- தடுப்பூசித் தவணைகள் மட்டும் மாறும்.
- இவர்களுக்கு மூன்று தவணைகள் வழங்கப்பட வேண்டும்.
- முதல் தவணைக்குப் பிறகு இரண்டு மாதங்கள் கழித்து இரண்டாம் தவணையையும், 6 மாதங்கள் கழித்து மூன்றாம் தவணையையும் (0, 2, 6) செலுத்திக்கொள்ள வேண்டும்.

**தவணைகள் ஏன் வித்தியாசப்படுகின்றன?**

- இந்த இடத்தில் உங்களுக்கு ஒரு சந்தேகம் தோன்றலாம்.
- ஹெச்பிவி தடுப்பூசிக்கு மட்டும் தடுப்பூச்குத் தகுந்தவாறு தவணைகள் ஏன் வித்தியாசப்படுகின்றன?
- காரணம், தடுப்பூசி தயாரிக்கப்படும் விதம், அதற்குப் பயன்படுத்திய கிருமி வகை, அது மனித உடலில் செயல்படும் முறை, அது நமக்குக் கொடுக்கும் தடுப்புத் திறன் அளவு எனப் பலதரப்பட்ட அம்சங்களை வைத்துத்தான் அந்தத் தடுப்பூசி எத்தனை தவணைகள் வழங்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.
- மற்ற கிருமிகளைப் போலன்றி ஹெச்பிவி கிருமிகளில் 'ஹெச்பிவி' 6, 'ஹெச்பிவி' 11, 'ஹெச்பிவி' 16, 'ஹெச்பிவி' 18 எனப் பல துணைவகைகள் உண்டு.
- எந்தத் துணைவகைக்குத் தடுப்பூசி முக்கியத்துவம் தர வேண்டும் என்பதைத் தயாரிப்பு நிறுவனங்கள் முடிவுசெய்கின்றன.

**தடுப்பூசி ஒப்பந்தங்கள்**

- 'ஹெச்பிவி' தடுப்பூசித் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால், எல்லா ஊர்களிலும் தடுப்பூசி தங்குதடையின்றிக் கிடைக்க வேண்டும்.
- தேசம் முழுவதிலும் தடுப்பூசி விநியோகத்துக்கும் பயன்பாட்டுக்கும் தகுந்த பாதுகாப்புச் சங்கிலி (Cold Chain) அமைக்கப்பட வேண்டும்.
- இதற்கு நிறையச் செலவாகும். ஆகவே, இந்திய அரசு உலகளாவிய தடுப்பூசிக் கூட்டணியான 'கேவி' (GAVI) அமைப்புடன் 3 வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.
- 'கேவி' 2023 இல் ரூ.2,500 கோடி வழங்கியுள்ளது.
- தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு – பாதுகாப்பு (Tamil Nadu Women employment and Saety (TNWESafe) திட்டத்தில் இந்தத் தடுப்பூசித் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்துகிறது.
- ஐந்தாண்டுத் திட்டம் இது. இதற்கு உலக வங்கி ரூ.1,185 கோடி வழங்கியுள்ளது.

**உலகளவில் ஆயுத இறக்குமதி இந்தியாவுக்கு 2-ம்இடம்**

- சீனா மற்றும் பாகிஸ்தான் எல்லைகளில் நிலவும் பதற்றமான சூழலே இந்தியா அதிக அளவில் ஆயுதங்களை வாங்கி குவிப்பதற்கு முக்கியக் காரணமாக கூறப்படுகிறது.
- கடந்த 2016-20 காலகட்டத்தைவிட, 2021-25 காலகட்டத்தில் இந்தியாவின் ஆயுத இறக்குமதி 4% குறைந்துள்ளது.
- இருப்பினும், உலக ஆயுத இறக்குமதியில் இந்தியா 8.2% பங்குடன் இரண்டாமிடத்தில் உள்ளது.
- உக்ரைன் (9.7%) முதலிடத்தில் உள்ளது.
- தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே ஆயுதங்கள் தயாரிப்பது அதிகரித்துள்ளதால் இறக்குமதி ஓரளவு குறைந்துள்ளது.
- இந்தியாவின் முதன்மை ஆயுத விநியோகஸ்தராக ரஷ்யா (40%) நீடித்தாலும், கடந்த 15 ஆண்டுகளில் ரஷ்யாவிடமிருந்து வாங்கும் அளவு பாதியாகக் குறைந்துள்ளது.
- தற்போது பிரான்ஸ் (29%) மற்றும் இஸ்ரேல் (15%) ஆகிய நாடுகளிடமிருந்து, இந்தியா அதிக ஆயுதங்களைப் பெறுகிறது